
www.roamingowls.com
Wildflowers of India
இந்தியாவின் காட்டு மலர்கள்


www.roamingowls.com
விரிவுரை நோக்கம்
• காட்டு கோழியும் வீட்டில் வளர்க்கும் கோழியும் ஒன்றல்ல, அது போல தான் காட்டிலும் தோட்டத்திலும் உள்ள மலர்கள். இரண்டையும் ஒப்பிட்டே பார்க்க முடியாது.
• வெளிநாட்டில் மட்டுமல்ல நம் நாட்டிலும் அழகான மலர்கள் உள்ளன. விதவிதமான நிலப்பரப்புகள் உள்ள இந்தியாவில் அதற்கேற்ப மலர்கள் உள்ளன.
• தாவரவியல் வகுப்பு இல்லை, காட்டில் மலர்களை பார்ப்பதன் அழகையும் , அந்த அனுபவங்களையும் இந்த உரையில் பகிர போகிறேன்.
• சாப்பிட கூடிய பழங்கள் , மருத்துவ பயனுள்ள செடிகள் பற்றி கூற போவதில்லை. பயனுள்ளது , பயனற்றது என்ற வகைப்படுத்துதலே தேவையான / தேவையற்ற செடிகள் என்று வேற்றுமையை உண்டாக்குகிறது.


காட்டு மலர்கள் என்றால் என்ன ?
காட்டில் உள்ள மலர்களும் மனிதர்களின் தலையிடுதல் இல்லாமல் தானாக வளரும் அனைத்து செடிகளும் காட்டு செடிகள், அந்த செடிகளில் மலரும் மலர்கள் காட்டு மலர்கள்.
Rose
Malaxis muscifera / Fly bearing Malaxis
www.roamingowls.com



பூச்சிகளை சாப்பிடும் Drosera burmannii போன்ற செடிகளை பற்றி கேள்விபடும்போது நாம் அவை பெரிய செடிகள் என்று நினைப்போம். நிஜ வாழ்க்கையில் அவை மிக மிக சிறிய செடிகள். அவற்றை சென்னை போன்ற இடத்தில் கூட பார்க்க முடியும் . மாடு மேய்ந்து விட்டு போன ஒரு இடத்தில் புற்களின் நடுவே எடுத்த படம் இது.
www.roamingowls.com


பூச்சிகளை கவர்ந்திழுக்க வித விதமான வடிவங்களிலும் வண்ணங்களிலும் காட்டு மலர்கள் உள்ளன.
Arisaema tortuosum / Whipcord Cobra Lily
www.roamingowls.com



அழகிய மலர்கள் கொண்ட உள்நாட்டு மரங்கள்
• பலாஷ் , வேங்கை , சரகொந்தை,முள் முருங்கை,சில்க் காட்டன் போன்ற அழகிய மலர்கள் கொண்ட உள்நாட்டு மரங்கள் இருக்கும்போது குல்மொஹர் , ஜக்கரான்டா , காப்பர் பாட் போன்ற அயல்நாட்டு மலர்களிலேயே நம் மோகம் உள்ளது.
• வேற்று நாட்டு மரங்களில் பறவைகளை பார்க்க முடியாது, ஆனால் நம் நாட்டு மரங்கள் மலரும்போது பறவைகள் , பட்டாம்பூச்சிகள் மொய்த்து தள்ளிவிடும். அந்த இடமே கலகலப்பாக இருக்கும்.
www.roamingowls.com



காட்டு மலர்களின் முக்கியத்துவம்
காட்டு மலர்கள் ஒரு இடத்தின் பல்லுயிர் தன்மையை குறிக்கின்றன.
இயற்கையில் மலர்கள் மகரந்த சேர்க்கைக்காகவும் தேனீக்கள் , பட்டாம்பூச்சிகள் , எறும்புகள் தேனுக்காகவும் ஒரு ஒன்றிய வாழ்வு முறை உள்ளது.
Cypripedium cordigerum / Heart Shaped Slipper Orchid
www.roamingowls.com



இந்தியா காட்டு மலர்களின் பொக்கிஷம்.
இந்தியாவில் ஏகதேசம் மலர் செடி வகைகள் 18000.
அவற்றில் 1256 வகை ஆர்க்கிட் செடிகள் உள்ளன.
400 வகை அஸ்டெர் செடிகள் உள்ளன.
உலகில் உள்ள செடிகளில் 6-7% இந்தியாவில் உள்ளன.
Iris clarkei / Himalayan Iris
www.roamingowls.com



இந்தியாவில் காட்டு மலர்களின் முக்கிய பகுதிகள்
www.roamingowls.com
இமாலய மலை
வடகிழக்கு இந்தியா
வடமேற்கு இந்தியா
அந்தமான் & நிகோபார் தீவுகள்
மேற்கு தொடர்ச்சி மலைகள்
கிழக்கு தொடர்ச்சி மலைகள்
Pakistan
India
Sri Lanka


இமாலய மலை
www.roamingowls.com



இமாலய மலையின் வசந்த காலம்
பனிபடர்ந்த மலைகளில் இளவேனிற்காலம் குறுகி இருக்கும். அதனால் மலர்கள் சிறிய செடிகளில் படபடவென்று மலர்ந்துவிடும்.
Primula denticulata / Drumstick Primrose
www.roamingowls.com



இளவேனிற்கால மலர்கள்
பாறைகளில் உள்ள செடிகள் முதலாக மலர்ந்துவிடும். வசந்த காலத்திலும் சில நேரம் பனி பெய்து விடும். அதை தாங்கும் அளவுக்கு இந்த செடிகள் தெம்பாக இருக்கும்.
Bergenia ciliata/Frilly Bergenia
Nepeta floccosa
www.roamingowls.com


www.roamingowls.com
இமாலய
மலர்வெளிகள்


இமாலய மலை மலர்வெளிகள்
www.roamingowls.com


இமாலய மலை மலர்கள்
எவ்வளவு விதமான வடிவங்களும் , வண்ணங்களும் !! யோசித்து பார்க்கவே இயலாது.
Lloydia longiscapa /Tall Alplily
Hymenidium stellatum / Starry Milk Parsley
Cassiope fastigiata / Himalayan Heather
Anemonastrum obtusilobum / Blue Himalayan Anemone
Oxygraphis polypetala / Himalayan Oxygraphis
Primula dickieana / Dickie's primrose
www.roamingowls.com


இமாலய மலர்கள்
மிக மிக அழகான கண்ணை கவரும் மலர்கள் இமாலயாவில் உள்ளன. மலர்வெளிகளில் உள்ள அனைத்து மலர்களையும் பார்ப்பதற்கு நாட்கள் பத்தாது.
Morina longifolia/Himalayan Whorlflower
Pedicularis gracilis/Slender Lousewort
Papaver guilelmi-waldemarii/ Blue Poppy
www.roamingowls.com


இந்தியன் பிக்காவின்
உணவு நாங்கள் பார்த்த
பாப்பி மலர் !
www.roamingowls.com


www.roamingowls.com


அழகிய பூக்களின்
பள்ளத்தாக்கு
www.roamingowls.com



பூக்களின் பள்ளத்தாக்கு
உள்ளே எங்கும் நிரம்பி
இருக்கும் பூக்கள்
www.roamingowls.com



Saussurea obvallata / Brahma Kamal
www.roamingowls.com


Leontopodium jacotianum –
Edelweiss
www.roamingowls.com


பூக்களின் நடுவே ஒரு
பாதை .
www.roamingowls.com


இமாலய மலை ரோடோடென்ட்ரான் மலர்கள்
www.roamingowls.com


பல விதமான வண்ணங்களில் ரோடோடென்ட்ரான் மலர்கள்
www.roamingowls.com


ரோடோடென்ட்ரான் மலர்கள்
www.roamingowls.com
ஏறத்தாழ 50 வகை ரோடோடென்ட்ரான் செடிகள் இமாலய மலையில் உள்ளன . இமாலய மலைகளில் 8000 அடிகளுக்கு மேல் இவற்றை பார்க்க இயலும்.
Rhododendron ciliatum
Rhododendron niveum
Rhododendron sikkimense
Rhododendron hodgsonii
Rhododendron roseum
Rhododendron glaucophyllum



வடகிழக்கு இந்தியா
www.roamingowls.com


வடகிழக்கு இந்தியா
ரெட் பாண்டா இருக்கும் இந்த காடுகள் இந்தியாவில் ஆர்க்கிட் செடிகளுக்கு பெயர் போனது.
www.roamingowls.com



மரங்கள் முழுவதும் ஆர்க்கிட் செடிகள்
www.roamingowls.com


மரங்கள் முழுவதும் ஆர்க்கிட் செடிகள்
www.roamingowls.com


வடகிழக்கு ஆர்க்கிட் செடிகள்
அருணாச்சல் மாகாணம் 612, சிக்கிம் 560, இமாலய மலை 479, 388 வகைகள் இந்தியாவில் மட்டும் உள்ளன, அவற்றில் 128 நம் மேற்கு தொடர்ச்சி மலையில் மட்டுமே காணப்படுகிறது
Dendrobium rotundatum
Dendrobium sp
Dendrobium gibsonii
Coelogyne corymbosa
Dendrobium nobile
Dendrobium aphyllum
www.roamingowls.com



மழைக்காடுகள்
ஒட்டுண்ணி செடிகளை நல்ல மழை உள்ள காடுகளில் பார்க்க முடியும். இச்செடியை சிராப்புஞ்சியில் பார்த்தோம்.
Balanophora dioica
www.roamingowls.com


ஆர்க்கிட் மட்டுமல்லாது பிற அழகிய மலர்கள்
இவ்விடங்கள் பட்டாம்பூச்சிகளுக்கும் பெயர் போனது என்பதால் அதற்கேற்ப விதவிதமான மலர்களையும் பார்க்க முடியும்.
இந்த இமாலய லன்டர்ன் மலர் தபால் ஸ்டாம்ப்பில் கூட உள்ளது.
Curcuma aromatica
Agapetes serpens
www.roamingowls.com


அந்தமான் தீவுகள்
இண்டோ - மலாய செடிகள்
www.roamingowls.com


தீவில் உள்ள மரங்கள்
அந்தமான் தீவுகளில் அதிக அளவு மழை உள்ளதால் மரங்கள் முழுவதும் ஆர்க்கிட் செடிகள்.
www.roamingowls.com


மரங்களில் உள்ள மலர்கள்
அங்கே அலையாத்தி காடுகள் நிறைய உண்டு , அதனால் MANGROVE மலர்களை பார்க்கலாம். காட்டு மரங்களும் நிறைய வகைகள் உண்டு.
Rhizophora apiculata / Tall-stilt mangrove
Firmiana colorata / Scarlet Sterculia
www.roamingowls.com


அந்தமான் ஆர்க்கிட் மலர்கள்
அந்தமான் தீவில் மரங்களில் பூத்துக்கிடந்த ஆர்க்கிட் மலர்கள்.
இந்த பிங்க் மலரின் பெயர் Toothbrush orchid.
Dendrobium crumenatum
Dendrobium secundum
Papilionanthe teres
www.roamingowls.com


Aquatic Plants
Nymphoides indica - Water Snowflake



www.roamingowls.com
கடலின் அருகில் உள்ள விதவிதமான செடிகளை பார்க்க முடியும் என்று புரிந்தது.


மேற்கு தொடர்ச்சி மலை
www.roamingowls.com



மேற்கு தொடர்ச்சி மலை மலர்கள்
விதவிதமான வண்ண மலர்களின் இருப்பிடம். மழைக்காலம் தான் மேற்கு தொடர்ச்சி மலைகளில் மலர்கள் பார்ப்பதற்கு சிறப்பான தருணம்.
Exacum wightianum
Mucuna nigricans
Sonerila rotundifolia
Zingiber zerumbet
Begonia dipetala
Gomphostemma heyneanum
www.roamingowls.com


பால்சம் மலர்கள்
நூற்றுக்கும் மேற்பட்ட பால்சம் வகைகள் இந்தியாவில் உள்ளன, அவற்றில் நிறைய மேற்கு தொடர்ச்சி மலைகளில் மட்டுமே காணப்படும். நிறைய பிங்க் வண்ணத்தில் மட்டுமே இருக்கும். Green Tail Balsam மிகவும் அருகி வரும் நிலையில் உள்ள மலர் (Critically Endangered)
Impatiens balsamina
Impatiens campanulata
Impatiens maculata
Impatiens fasciculata
Impatiens aliciae
Impatiens coelotropis
www.roamingowls.com


கிளி மூக்கு பால்சம்
இந்த பால்சம் மட்டும் தான் மரங்களின் மேல் வளரும் (Epiphytic Balsam).
www.roamingowls.com


குறிஞ்சி மலர்கள்
12 வருடத்திற்கு ஒருமுறை மலரும் குறிஞ்சி உலக அளவில் சிறப்பு உள்ளது. நீலகிரி மலை பெயர் காரணமே இவர்கள் தான்.
www.roamingowls.com


மேற்கு தொடர்ச்சி மலை ஆர்க்கிட் மலர்கள்
Tainia bicornis
Vanda spathulata
Habenaria longicorniculata
Disperis neilgherrensis
www.roamingowls.com



தனித்துவம் மிக்க மற்ற மலர் வகைகள்
Ceropegia , Caralluma போன்ற தனித்துவமான செடி வகைகளை இங்கே காணலாம் . மேலும் அரிய ஒட்டுண்ணி வகையறாக்களையும் இங்கே பார்க்கலாம்.
Ceropegia candelabrum
Christisonia tubulosa
www.roamingowls.com


Bicolor Caralluma
www.roamingowls.com


களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் உள்ளே
சாடகை / Tree vernonia



டெக்கான் பீடபூமி
www.roamingowls.com


காஸ் பூக்களின் பள்ளத்தாக்கு
ஸஹாயத்ரி பீடபூமி பகுதியில் உள்ள மலர்கள்
www.roamingowls.com



தனித்துவமான மலர்கள்
ஆகஸ்ட் - செப்டெம்பர் மாதங்களில் இங்கே மலர்வெளிகளை பார்க்கலாம்.
Malabar Delphinium
Murdannia lanuginosa
Pogostemon deccanensis
www.roamingowls.com


www.roamingowls.com
காஸ் பூக்களின் பள்ளத்தாக்கு ஆகஸ்ட் மாதத்தில்
Impatiens lawii


காஸ் பூக்களின் பள்ளத்தாக்கு ஆகஸ்ட் மாதத்தில்
www.roamingowls.com



கிழக்கு தொடர்ச்சி மலைகள்
இதுவரை பார்த்த காடுகளை விட மழை மிகவும் குறைவாக உள்ள காடுகள். அதனால் இங்கே முட்கள் உள்ள செடிகள் நிறைய பார்க்கலாம் , மலர்களும் வேறு விதமாக இருக்கும்.
www.roamingowls.com


கிழக்கு தொடர்ச்சி மலை மலர்கள்
Pavetta indica
Barleria cuspidata
Kleinia grandiflora
Marsdenia volubilis
www.roamingowls.com


Memecylon umbellatum / Ironwood Tree
இங்கே தரையில் உள்ள செடிகளை விட புதர் செடிகள் அதிகமாக இருக்கும், அதனால் நல்ல மழைக்கு பிறகு புதர் செடிகள் முழுவதும் மலர்ந்து அழகாக இருக்கும்.
www.roamingowls.com


தனித்துவம் மிக்க மலர் வகைகள்
இதில் முர்தானியா மலர் 80 வருடங்கள் கழித்து சென்னையில் கண்டுபிடித்தனர் என்று 10 வருடத்திற்கு முன் செய்தி பார்த்தேன். ஆனால் எனக்கு தெரிந்தவரை இந்த மலர்கள் இவ்விடங்களில் எப்பொழுதும் உண்டு. கிழக்கு தொடர்ச்சி மலைகளில் மலர்களை பெரிதாக பார்ப்பதற்கு ஆட்கள் கிடையாது என்பதே காரணம்.
Mitragyna parvifolia
Grewia flavescens
Murdannia striatipetala
Trichuriella monsoniae
Osbeckia zeylanica
Martynia annua
www.roamingowls.com


பாலைவனம்
மலர்களை பற்றி பேசும்போது பாலைவனம் ஏன் ?
www.roamingowls.com


இந்தியாவில் கள்ளி செடிகள் (cactus) வகைகள் கிடையாது.
ஆமணக்கு செடி வகைகள் தான் உண்டு. வேலிகளாக நாம் உபயோகிக்கும் சப்பாத்தி கள்ளி செடிகள் நம் நாடு செடிகள் கிடையாது.
www.roamingowls.com


ஆமணக்கு செடிகள் (Euphorbiaceae)
www.roamingowls.com


ராஜஸ்தான் மலர்கள்
இந்த ஆரஞ்சு மலர் ராஜஸ்தானின் மாநில மலர். நம் நாட்டில் உள்ள பாலைவனத்தில் அவ்வளவு மலர்களை பார்க்க முடிவதில்லை
Centaurea iberica
Tecomella undulata
Calotropis procera
www.roamingowls.com


www.roamingowls.com
ஒட்டுண்ணி செடி
Cistanche tubulosa/Yellow broomrape
அரிய , அருகிவரும் இந்த செடி meshwak போன்ற செடிகளை நம்பி வளரும்.


காட்டு மலர்களின் இன்றைய நிலைமை
www.roamingowls.com


அழிந்து வரும் காடுகள்
மிக வேகமாக மனிதர்கள் காட்டை அழிப்பதால் நிறைய செடிகள் அருகி வரும் நிலையில் உள்ளது. சித்த வைத்தியர்களிடம் கேட்டபோது எவ்வளவு மருந்து செடிகள் அப்படியே காணாமல் போய்விட்டது என்று தெரிந்தது.
www.roamingowls.com


அடிக்கடி மனிதனால் உருவாகும் காட்டு தீ
www.roamingowls.com


வெற்று நிலங்கள் / விளை நிலங்கள்
விவசாயத்தை பற்றி குறை சொன்னால் நம்மில் பலருக்கு மிகவும் கோபமாகி விடும். ஆனால் காடுகள் அந்த காலத்திலிருந்து காணாமல் போய் கொண்டிருப்பதற்கு ஒரு முக்கிய காரணம் விவசாயம்.
தேவைக்கு அதிகமான நிலங்களை நாம் விவசாயத்திற்கு உபயோகித்து, அதன் பிறகு அப்படியே தரிசு நிலங்களாக எந்த செடிகளும் வளராத அளவுக்கு உரங்கள் கொட்டி மண்ணில் விஷம் மட்டுமே உள்ளது. வளரும் நாடுகள் அனைத்திலும் உள்ள பிரச்சனை இது.
உண்பதற்கு ஏற்ற செடிகளை தவிர மற்ற அனைத்து செடிகளும் தேவை அற்றது என்று பெரும்பாலோரும் நினைப்பதால் கிராமங்களில் கூட மற்ற செடிகளை காண முடிவதில்லை
www.roamingowls.com


காடாக கிடக்கிறது !
சுத்தம் செய்ய வேண்டும் !
திருத்த வேண்டும் !
இவை எல்லாம் நாம் சரளமாக பேசுகின்ற வார்த்தைகள் . இதன் அர்த்தம் எல்லாம் செடி கொடிகளை அழிப்பதையே குறிக்கின்றன
www.roamingowls.com


மாடு / ஆடு மேய்த்தல்
www.roamingowls.com
ஒரே இடத்தில் தினம் தினம் ஆடு, மாடுகளை மேய்ப்பதால் பெரும்பாலான செடிகள் ஊருக்குள், ஆற்றின் ஓரங்களில் காணாமல் போய்விட்டன. மிஞ்சி இருக்கும் செடிகள் பெரும்பாலும் களை செடிகள், ஆடு சாப்பிடாத செடிகள்.


தோட்ட மலர்கள் மிகவும் பெரியதாகவும் , வண்ணங்கள் அதிகமாகவும் , வித விதமான வடிவங்களிலும் கிடைப்பதால் பலர் காட்டு மலர்களை விட தோட்ட மலர்களையே விரும்புகிறார்கள். அந்த மலர்களில் பட்டாம்பூச்சி , தேனீ வருகிறதா என்று யாருக்கும் கவலை கிடையாது , பெரிதாக மலர்கிறதா என்பது மட்டுமே நோக்கம்
www.roamingowls.com


www.roamingowls.com
வீட்டில் வளர்க்கும் செல்ல பறவைகள் வெளியே விட்டால் இறந்துவிடும். ஆனால் செடிகள் அப்படி அல்ல , நம்மூரில் மலைகளில் பார்க்கும் பெரும்பாலான செடிகள் தோட்டங்களில் இருந்து வெளியே பரவி வளர ஆரம்பித்தவை. அதனால் வெளிநாட்டு செடிகளை பற்றி தெரியாமல் இங்கே கொண்டு வந்து வளர்க்கும்போது அவை நாட்டு செடிகள் பலவற்றை கொன்றுவிடுகின்றன. நம்மூரில் லேண்டனா செடிகள் (Lantana indica) உண்டு ஆனால் அது சிறியதாகவும் , வெள்ளையாகவும் இருக்கும். ஆனால் Lantana camara வை கொண்டு வந்தோம், நிறைய வண்ணமுள்ளது என்று. இன்று வரை நர்செரியில் அந்த காட்டை அழிக்கும் செடிகளை விற்கிறார்கள் !!


பார்த்தீனியம் , லேண்டனா , கோட் வீட் செடிகள் தான் இப்பொழுது காடுகளிலும் , விவசாயம் செய்யாமல் விட்ட இடங்களிலும் காண முடிகின்றது
. 65-80% இடங்கள் இந்த செடிகள் தான் சீக்கிரம் ஆக்கிரமிக்க போகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.
www.roamingowls.com


ஆகாய தாமரை பூக்கும் போது மிகவும் அழகாகத்தான் இருக்கும் ஆனால் அது இருக்கும் நீர் நிலை ஆரோக்கியமானது அல்ல.
நீரின் மேல் பூக்கும் பூக்கள் ஏகதேசம் அழிந்தே போய்விட்டன.சகஜமாக பார்த்த குமுதினி மற்றும் ஆம்பல் மலர்களை இப்பொழுது தேடி தேடி ஓட வேண்டியிருக்கிறது.


ஆரோக்கியம் என்ற பெயரில் அழிவு
இமாலய மலைகளில் ஆயுர்வேதம் என்ற பெயரில் பெரிய கம்பெனிகள் Dabur & Himalayas அங்கே உள்ள மருந்து செடிகளை உள்ளூர் மக்களை வைத்து எடுத்து கொள்கிறார்கள்.
www.roamingowls.com


வண்ணமிக்க மலர்கள் , தேனீக்கள் , பட்டாம்பூச்சிகள் எல்லாம் காணாமல் போய்விட்டு வேற்று செடிகளுடன் நம் காடுகள் இருக்க போகின்றதா?
நாம் என்ன செய்யலாம் ???
www.roamingowls.com


பல ஆண்டுகளாக இயற்கைக்கு தொடர்ந்து செய்யப்பட்ட தீங்குகளுக்கு ஒரு சில வரிகளில் தீர்வு சொல்ல இயலாது.
ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பச்சையாக இருந்தாலும் அவை காடு அல்ல, காடுகளை சுற்றி இருக்கும் அனைத்து இடங்களும் தனியார்களுக்கு சொந்தமாக இருக்கும்பொழுது அவற்றை மாற்றுவது இயலாத காரியம்.
தனிப்பட்ட முறையில் நம் வீட்டை சுற்றி சிறிய மாற்றங்களை செய்யலாம். நமக்கு தேவையான செடிகள் என்றில்லாமல் நம்மை சுற்றி இருக்கும் மற்ற சிறு உயிரினங்களுக்கு தேவையான செடிகள் என்ன என்று தேடி ஒவ்வொருவரும் வெவ்வேறு செடிகள் வைக்க ஆரம்பித்தால் நாம் வாழும் இடங்கள் அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்.
பெரிய அளவில் மாற்றம் செய்ய வனத்துறை , அரசாங்கம் , ஆயிரக்கணக்கான ஏக்கர்களின் சொந்தக்காரரர்கள் ஈடுபாடு காட்டினால் தான் ஏதாவது செய்ய முடியும்.
மனிதர்களால் பூங்கா செய்ய முடியுமே தவிர காட்டை உருவாக்க முடியாது !!
www.roamingowls.com


நன்றி !!
www.roamingowls.com